1975 மார்ச் 12]

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, சில கிராமங்களிலே ஆரம்பச் சுகாதார நிலையத்திலே, குடும்பக் கட்டுப்பாடு நிலையமும் கட்டி முடித்து விடுகிறார்கள். அதற்கு எந்தவிதப் பாதுகாப்பும் இல்லை. அங்கே பெரிய அசிங்கமெல்லாம் செய்கிறார்கள். ஆகவே, அதைச் சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் போடப்படுமா? ஆரம்பத்திலே எஸ்டிமேட் போடும்போதே, காம்பவுண்ட் சுவருக்கும் சேர்த்து எஸ்டிமேட் போட்டு, அதை அரசு பாதுகாக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, கட்டடம் கட்டுவதற்கே பணமில்லாத ஒரு நெருக்கடி நாட்டிலே பொதுவாக இருக்கிறது. ஆகவே, சுற்றுச் சுவருக்கு ஏறத்தாழ ரூ. 30,000, ரூ. 40,000, சில இடங்களிலே ரூ. 70,000 கூட ஆகும்—அதற்கு நம்முடைய நாட்டுப் பொருளாதாரம் இடம் தராது. ஆகவே தான், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் பொதுமக்களுடைய ஆதரவோடு அவற்றையெல்லாம் பாதுகாக்க வேண்டும். பாதுகாக்க வேண்டுமென்று சொல்லும் போது, மக்கள் தவறு செய்யாதபடி பாதுகாக்க வேண்டும். சுவரைக் கட்டிய பிறகு, சுவர் ஏறிக் குதித்து உள்ளே இருப்பதை எடுத்துக் கொண்டு போவதைப் பார்க்கிறோம். சுற்றுச் சுவர் பாதுகாப்பு இல்லை, அறிவும் தெளிவும்தான் பாதுகாப்பு.

Kesari dhall

*286 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether Kesari dhall is imported in this State; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: ஏராளமான கேசரி பருப்பு இங்கு வந்து துவரம் பருப்புடன் சேர்க்கப்பட்டு, அடல்டரேட் பண்ணி விற்கப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா? அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து, இந்தமாதிரி அடல்டரேட் பண்ணாமலிருக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஏராளமான கேசரி பருப்பு எங்கே வந்து, எங்கே அடல்டரேட் செய்கிறார்கள் என்பது உறுப்பினருக்குத் தெரியுமா? அப்படி தெரிந்திருந்தால், ஏன் அவர் அதை அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வில்லை?

திரு. என். கே. பழனிசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நான் கேள்வி கேட்கிறேன், எதிர்க் கேள்வி போடலாமா...

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, என்னுடைய நோக்கம் கேள்விக்கு எதிர் கேள்வி போடவேண்டு மென்பதல்ல, நிலைமை விளக்கம் பெறுவதுதான்.

தேசிய நெடுஞ்சாலைகள்

* 287 **வினா—திரு. ஆலடி அருணா :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் என்ன? 1967-க்குப் பின்னர் எவ்வளவு தூரம் தேசிய நெடுஞ்சாலையில் இணைக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ் நாட்டில் தற்பொழுது உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 1,852 கிலோ மீட்டர். 1967-க்குப் பின் 51 கிலோ மீட்டர் நீளமுள்ள பாளையங்கோட்டை-தூத்துக்குடி சாலை தேசிய நெடுஞ் சாலையோடு இணைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, பஸ் ரூட் செல்கிற எல்லா இடங்களையும் ஹைவேஸ் ரூட்டாக ஆக்க அரசு முடிவு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது தேசிய நெடுஞ்சாலை பற்றிய கேள்வி. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் தருகிறேன். எல்லாம் நிதி நிலையைப் பொறுத்திருக்கிறது.